பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
07 08 2025 6 45
**வியாழக்கிழமை** காலை

## தலைப்புச் செய்திகள்

1. ***நாட்டில் வெளிப்படையான, மக்களை மையமாகக் கொண்ட நிர்வாக மாதிரி கட்டமைக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.***

2. ***இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு கூடுதல் வரி விதித்துள்ள அமெரிக்காவின் செயல் நியாயமற்றது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.***

3. ***தமிழகத்தில் அரசுப் பள்ளி மாணவிகளின் உயர்கல்வி சேர்க்கை 19 சதவீதம் அதிகரித்துள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. கோவி செழியன் கூறியுள்ளார்.***

4. ***தமிழகத்தின் நீலகிரி, கோயம்புத்தூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.***

5. போலந்தில் நடைபெற்று வரும் சர்வதேச தடகளப் போட்டியின் ஈட்டி எறிதல் பிரிவில் இந்தியாவின் அன்னு ராணி தங்கப் பதக்கம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

கடந்த 11 ஆண்டுகளில் நாட்டில் வெளிப்படையான, மக்களை மையமாகக் கொண்ட நிர்வாக மாதிரி கட்டமைக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

புதுதில்லியில் மத்திய அரசுத் துறைகளின் ஒருங்கிணைந்த வளாகமான கர்த்தவ்யா பவன் திறப்பு விழா நிகழ்ச்சியில்

உரையாற்றிய அவர், ஒட்டுமொத்த தொலைநோக்கு பார்வையுடன் இந்தியா வடிவமைக்கப்பட்டு வருவதாகவும், அனைத்துப் பிராந்தியங்களிலும் வளர்ச்சி சென்றடைவதாகவும் தெரிவித்தார்.

நாட்டில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பஞ்சாயத்து கட்டிடங்களும், ஏழை மக்களுக்காக 4 கோடிக்கும் அதிகமான வீடுகளும், 300 புதிய மருத்துவக் கல்லூரிகளும் கட்டப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

உலகின் 3வது மிகப்பெரிய பொருளாதார நாடாக இந்தியாவை திகழச் செய்ய வேண்டும் என்றும், உற்பத்திக்கான இந்தியா மற்றும் சுயசார்பு இந்தியாவின் வெற்றிக் கதையை படைக்குமாறு மக்களுக்கு அவர் அழைப்பு விடுத்தார்.

கர்த்தவ்யா பவன், நாட்டின் கனவுகளை நிறைவேற்றும் என்றும், வளர்ச்சியடைந்த இந்தியாவின் கொள்கைகளுக்கு வழிகாட்டும் என்றும் அவர் கூறினார்.

பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் துறைகளை ஒரே அமைப்பின்கீழ் ஒருங்கிணைத்து நிர்வாகத்தை மேம்படுத்த இது வடிவமைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதுபோன்ற வசதிகள் ஊழியர்களுக்கு சிறந்த பணிச் சூழலை அளிக்கும் என்று அவர் கூறினார்.

அடிப்படை வசதிகள் கிடைப்பதுடன் ஒட்டுமொத்த பணித் திறனும் அதிகரிக்கும் என்றும், தற்போது செலவிடப்பட்டு வரும் ஆயிரத்து 500 கோடி ரூபாயை அரசு சேமிக்க முடியும் என்றும் தெரிவித்தார்.

நாட்டின் ஜனநாயகம் மற்றும் அரசியல் சாசனத்தின் அடிப்படை மதிப்புகளை இந்த கர்த்தவ்யா பவன் என்ற பெயர் பிரதிநிதித்துவப் படுத்துகிறது என்று திரு. மோடி குறிப்பிட்டார்.

<<<<>>>>

***இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு கூடுதல் வரி விதித்துள்ள அமெரிக்காவின் செயல் நியாயமற்றது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.***

***இந்தியப் பொருட்களுக்கு கூடுதலாக 25 சதவீத வரி விதிக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ள நிலையில், இந்தியா இந்த கருத்தை வெளியிட்டுள்ளது.***

***இதுகுறித்து வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், நாட்டின் நலனைப் பாதுகாக்கும் அனைத்து நடவடிக்கைகளையும் இந்தியா மேற்கொள்ளும் என்று கூறப்பட்டுள்ளது.***

***ரஷ்யாவில் இருந்து எண்ணெயை இந்தியா இறக்குமதி செய்வதற்கு எதிராக அமெரிக்க இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது குறித்து சுட்டிக்காட்டியுள்ள வெளியுறவு அமைச்சகம், இவ்விவகாரம் தொடர்பாக இந்தியாவின் நிலை குறித்து ஏற்கனவே தெளிவாக அமெரிக்காவிடம் எடுத்துக் கூறப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.***

***இந்தியாவின் 140 கோடி மக்களின் எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டும், சந்தைக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டும் இந்தியா எண்ணெயை ரஷ்யாவில் இருந்து இறக்குமதி செய்வதாக கூறியுள்ளது.***

மற்ற நாடுகள் தங்கள் நலனைகளைப் பாதுகாக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிலையில் இந்தியாவின் மீது அமெரிக்கா கூடுதல் வரி விதித்துள்ளது எதிர்பாராதது என்று வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் அரசுப் பள்ளி மாணவிகளின் உயர்கல்வி சேர்க்கை 19 சதவீதம் அதிகரித்துள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. கோவி செழியன் கூறியுள்ளார்.

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் மன்னை ராஜகோபால சுவாமி அரசினர் கலைக்கல்லூரியின் 39வது பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

புதுமைப்பெண் திட்டம் அமல்படுத்தப்பட்ட பிறகு உயர்கல்வியில் அரசுப் பள்ளி மாணவிகளின் சேர்க்கை விகிதம் அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டார்.

<<<<>>>>

பள்ளி மாணவர்களுக்கு உடற்கல்விக்கான பாடத்திட்டப் புத்தகம் வழங்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாக உடற்கல்வி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுவதாகவும் மாநில பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மயிலாடுதுறை மாவட்டம் தருமபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், விளையாட்டு, மனம் மற்றும் உடல் சார்ந்து மாணவர்கள் தங்களை எப்படி தயார்படுத்திக்கொள்ள வேண்டும் என்று வகுப்புகள் நடத்தப்படும் என்று கூறினார்.

முன்னதாக மாணவர்களை வழி நடத்தும் முறைகள், பள்ளிகளில் தேர்ச்சி விகிதத்தை அதிகரித்தல், கற்றல், கற்பித்தல் தொடர்பாக தலைமை ஆசிரியர்களுடன் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்துரையாடினார்.

<<<<>>>>

தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கை முறையாக பராமரிக்க மாநில அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தியுள்ளார்.

வேலூர் மாவட்டம் குடியாத்தத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாகக் கூறினார்.

தம்மிடம் அளிக்கப்படும் கோரிக்கைகளை மாநில அரசுக்கு அனுப்பி வைத்து அதை நிறைவேற்றுமாறு வலியுறுத்துவேன் என்றும் திருமதி பிரேமலதா விஜயகாந்த் குறிப்பிட்டுள்ளார்.

< < < < > > > >

ஆடவர் ஜுனியர் மாநில அளவிலான ஹாக்கிப் போட்டியில் சிறப்பாக விளையாடிய தமிகத்தைச் சேர்ந்த *49* வீரர்களுக்கு தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

பயிற்சியின் நிறைவில் தேர்ந்தெடுக்கப்படும் *18* வீரர்கள் தேசிய ஹாக்கிப் போட்டியில் விளையாட உள்ளதாக பயிற்சியாளர் திரு. முத்துக்குமார் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(Voice Byte - முத்துக்குமார் - 35 Sec)*

< < < < > > > >

தமிழகத்தின் பல்வேறு இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளரிடம் பேசிய அந்த மையத்தின் இயக்குநர் திரு. செந்தாமரைக் கண்ணன், நீலகிரி, கோயம்புத்தூர், விழுப்புரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்று குறிப்பிட்டார்.

< < < < > > > >

## இருவரிச் செய்திகள்

ரஷ்யா சென்றுள்ள தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல் அந்நாட்டு உயர் அதிகாரிகளுடன் இந்தியா - ரஷ்யா இடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்து விவாதித்தார்.

-----------

இஸ்ரேல் நாட்டுக்கு உளவு பார்த்ததாக குற்றம்சாட்டப்பட்ட ஈரான் நாட்டு அணு விஞ்ஞானி *Rouzbeh Vadi*-க்கு தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டது.

-----------

உத்தராகண்ட் மாநிலம் உத்தர்காசி மாவட்டம் தராலியில் வெள்ளப்பெருக்கில் சிக்கியவர்களில் இதுவரை 190 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

-----------

தேசிய கைத்தறி தினம் இன்று கொண்டாடப்படுதை ஒட்டி நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

-----------

புதுச்சேரி பல்கலைக்கழக சமுதாயக் கல்லூரியில் காலியாக உள்ள பாடப்பிரிவுகளுக்கு இம்மாதம் 13ஆம் தேதி வரை சேர்க்கை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

-----------

புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளம், புதுக்கோட்டைவிடுதி ஆகிய ஊராட்சிகளில் மாநில பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. மெய்யநாதன் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

-----------

தமிழகத்தில் எம்.பி.பி.எஸ் மற்றும் பி.டி.எஸ். படிப்புகளுக்கான முதல் சுற்று கலந்தாய்வு 12ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

-----------

திருவள்ளூர் மாவட்டம் செங்குன்றம் அருகே போதைப்பொருட்களை வைத்திருந்த இருவரை காவல்துறையினர் கைது செய்தனர்.

-----------

***பெருநகர சென்னை மாநகராட்சியில் புதிதாக பணி ஆணை வழங்கப்பட்ட உதவிப் பொறியாளர்கள், வரைவாளர்கள் மற்றும் துப்புரவு ஆய்வாளர்களுக்கான அறிமுகக் கூட்டம் மேயர் திருமதி பிரியா தலைமையில் நடைபெற்றது.***

-----------

## *விளையாட்டுச் செய்திகள்*

சர்வதேச தடகளப் போட்டியின் ஈட்டி எறிதல் பிரிவில் இந்தியாவின் அன்னு ராணி தங்கப் பதக்கம் வென்றார்.

போலந்தில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் பிரிவின் இறுதிச் சுற்றில் அவர், 62 புள்ளி ஐந்து ஒன்பது மீட்டர் தூரத்திற்கு ஈட்டி எறிந்து இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

மகளிர் 800 மீட்டர் ஓட்டப் பிரிவில் இந்தியாவின் பூஜா வெண்கலப் பதக்கம் வென்றார்.

பந்தைய தூரத்தை அவர், 2 நிமிடம் 2 புள்ளி ஒன்பது ஐந்து வினாடிகளில் அவர் கடந்தார்.

-------------

ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் யாத்ரி பட்டேல், பிரியா ஆகியோர் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளனர்.

பாங்காக்கில் நடைபெற்று வரும் இப்போட்டியில் மகளிர் 22 வயதுக்கு உட்பட்டோருக்கான 57 கிலோ எடைப்பிரிவின்

அரையிறுதி ஆட்டத்தில் யாத்ரி பட்டேல், வியட்நாமின் Thi Nhung Quand-ஐ வென்றார்.

60 கிலோ எடைப்பிரிவின் அரையிறுதிப் போட்டியில் பிரியா உஸ்பெகிஸ்தானின் Odinakhon Ismoilovi-ஐ வென்றார்.

------------

20 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் ஆசியக் கோப்பை கால்பந்து போட்டியின் தகுதிச்சுற்று ஆட்டத்தில் இந்தியா – இந்தோனேசியா அணிகளுக்கு இடையேயான போட்டி கோல் ஏதுமின்றி டிராவில் முடிவடைந்தது.

------------

ஆசியக் கோப்பை கூடைப்பந்துப் போட்டியில் இந்தியா இன்று சீனாவை எதிர்கொள்கிறது.

ஜித்தாவில் நடைபெற உள்ள இப்போட்டி பிற்பகல் மணி 1.30க்கு தொடங்குகிறது.

<<<<>>>>